# கடலூர் பெருநகராட்சி

2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 30–ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம் — தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் — கடலூர் பெருநகராட்சி.
நாள்

*பொருள்*

| | |
|---|---|
| 1. | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு தற்போது நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பாதாள சாக்கடை திட்டம் மொத்தமுள்ள 45 வார்டுகளில் 33 வார்டுகள் முழுமையாகவும் 2 வார்டுகள் பகுதியாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 14034 வீட்டு இணைப்புகள் மட்டுமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் தற்போது வரை 2385 வீட்டு இணைப்புகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கடலூர் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு இணைப்புகள் வழங்கி திட்டத்தின் அனைத்து பொது மக்களுக்கும் பயன்பெறும் வகையிலும் மற்றும் திட்டம் முழுமையாக செயல்படுத்தும் விதமாக திட்டப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள இணைப்புகளில் வழங்கப்பட்ட இணைப்புகள் போக, மீதமுள்ள 11749 பாதாள சாக்கடை இணைப்புகள் துறை மூலம் வழங்கவும் சுற்றுச்சுவர் வரை உள்ள வீட்டிணைப்புகளிலிருந்து இணைப்புகள் வழங்கவும் மதிப்பீடு ரூ.635.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை TUFIDCO நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று பணி மேற்கொள்ளவும், திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>. |
| அ.கு.– | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம். |
| 2. | கடலூர் பெருநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–18ன் (TURIP) கீழ் சாலைகள் மேம்பாட்டுப்பணிகள் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று சிப்பங்களாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | **சிப்பம் – I** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4,7,9,12 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 174.00 |
| 2 | **சிப்பம் – II** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17,22,27,28 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 154.00 |
| 3 | **சிப்பம் – III** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32,33,42 மற்றும் 45, ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 172.00 |
| | மொத்தம் | 500.00 |

மேற்கண்ட 3 பணிகளுக்கும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட 11.12..2017 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு. மேற்கண்ட 3 பணிகளுக்கான விலைத்தொகுப்பு 28.12..2017 அன்று வலையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **சிப்பம் – I** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4,7,9,12 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 174.00 | மெஸர்ஸ். பாநாயகம் & Co, சிதம்பரம் | 3.89 % மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | ரு.டி.குமரேசன், கடலூர் | 5.88 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | **சிப்பம் – II** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17,22,27,28 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 154.00 | மெஸர்ஸ். பாநாயகம் & Co, சிதம்பரம் | 3.91 % மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | ரு.டி.குமரேசன், கடலூர் | 5.91 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | **சிப்பம் – III** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32,33,42 மற்றும் 45, ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 172.00 | ரு.டி.குமரேசன், கடலூர் | 3.91 % மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | மெஸர்ஸ். பாநாயகம் & Co, சிதம்பரம் | 5.84 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேலே பட்டியலில் கண்ட மூன்று பணிகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதலாக இருந்ததால் சிப்பம் 1 மற்றும் 2 ற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெஸர்ஸ். சபாநாயகம் & Co, சிதம்பரம் அவர்களிடமும் சிப்பம் 3ற்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு. டி.குமரேசன்,கடலூர் ஆகியோர்களிடம் விலைகுறைப்பு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்புள்ளி விலைவிகிதம் குறைவு செய்து 28.12.2017 அன்று கடிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1. | **சிப்பம் – I** - கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4,7,9,12 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 174.00 | 3.89 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | **சிப்பம் – II** -கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17,22,27,28 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 154.00 | 3.91 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | **சிப்பம் – III**- கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32,33,42 மற்றும் 45, ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 172.00 | 3.91 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண் 1 மற்றும் 2ல் கண்ட பணிகளுக்கு மெஸர்ஸ். சபாநாயகம் & Co, சிதம்பரம் அவர்களும் வரிசை எண் 2ல் கண்ட பணிக்கு திரு. டி. குமரேசன், கடலூர் அவர்களும் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு உட்பட்டு பணி மேற்கொள்வதாக குறிப்பிட்டு கடிதம் அளித்துள்ளார். இந்த 3 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புதல் செய்யவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொறியியல் கையேடு அத்தியாயம் II, பத்தி, 2.7.2ல் முதல் அமைப்பில் 5 % மதிப்பீட்டிற்கு கூடுதலான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தால் அந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–18ன் (TURIP) கீழ் மேற்கண்ட 3 பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ. எண் 1, 2 மற்றும் 3ல் கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு பணி மேற்கொள்ள கடிதம் அளித்துள்ள மெஸர்ஸ். சபாநாயகம் & Co, சிதம்பரம், திரு. டி. குமரேசன் கடலூர் ஆகியோர்களின் ஒப்பந்தப்புள்ளிகளையும் மன்றம் ஏற்கவும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.**

கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பெண்ணையாற்றங்கரையில் நடைபெறவுள்ள ஆற்றுத் திருவிழா 2018க்கான முன்னேற்பாடு நடவடிக்கையாக அப்பகுதியினை ஜே.சி.பி இயந்திரம் மூலம் சீர்செய்தல், தற்காலிக கழிப்பறைகள் அமைத்தல், உயர்கோபுர மின்விளக்குகளுக்கான தற்காலிக கூண்டு அமைத்தல், போலீஸ் பாதுகாப்பு பணி மேற்கொள்ள தற்காலிக உயர் கோபுர கூண்டு அமைத்தல் மற்றும் செம்மண் கொண்டு தற்காலிக சாலை அமைத்தல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கு 11.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.கார்த்திகேயன் | 0.28 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி | 5.33% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்டபடி திரு.பி.கார்த்திகேயன் என்பவர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.28 % குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கார்த்திகேயன், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் / தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி ஆணையர் / தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.

கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளுக்கு கேப்பர்மலை மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து நகரின் 21 இடங்களில் உள்ள மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீர் இரும்புச்சத்து அதிகமாகவும் தொட்டியில் மணல் மாசு படிந்தும் அளவு குறைவாகவும் உள்ளது. இதில் குடிநீரை வடிகட்டும் செயல் சரிவர நடைபெறுவதில்லை குடிநீர் சிவப்பு வண்ணமாக உள்ளது. கேப்பர்மலை மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள (Iron Removal Plant) 56 தொட்டிகள் மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தல் உள்ள 46 தொட்டிகளில் பில்டர் பெல்ட்டில் மணல் புதியதாக நிரப்பவும், 20 எம்.எம். ஜல்லிகள் மற்றும் மரக்கரி ஆகியவை மூலம் குடிநீர் சுத்தம் செய்யப்பட வேண்டும். மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 12.00 இலட்சத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

.

அ.கு.–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

5.

கடலூர் பெருநகராட்சி அலுவலக உபயோகத்தில் உள்ள ஈப்பு எண் TN 31 F 7171-க்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி தேவையான புதிய ஸ்பேர்களை பொருத்தி ஈப்பை சரிசெய்யும் பணி ரூ.49,000/– க்கு மேற்கொள்ள 05.01.2018–ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர் | ரூ. 49000/–<br>மதிப்பீட்டு விலைக்கு சமம் |
| 2. | விநாயகா ஆட்டோ காரேஜ், கடலூர் | ரூ.51500/–<br>மதிப்பீட்டை விட அதிகம். |
| 3. | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ். கடலூர் | ரூ.52000/–<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைக்கே விலைப்புள்ளி அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள சரவணன் ஆட்டோமொபைல்ஸ், கடலூர் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.–

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

6. கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் லாரி எண் TN 31 B 4838 க்கு தகுதிசான்று புதுப்பிக்க வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி தேவையான புதிய ஸ்பேர்களை பொருத்தி வாகனத்தை பெயிண்டிங் செய்து புதுப்பிக்கும் பணி ரூ.90,000/– க்கு மேற்கொள்ள 05.01.2018–ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர் | ரூ. 90000/–<br>மதிப்பீட்டு விலைக்கு சமம் |
| 2. | விநாயகா ஆட்டோ காரேஜ், கடலூர் | ரூ.93000/–<br>மதிப்பீட்டை விட அதிகம். |
| 3. | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ். கடலூர் | ரூ.94000/–<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட சரவணா ஆட்டோமொபைல்ஸ், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைக்கே விலைப்புள்ளி அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள சரவணன் ஆட்டோமொபைல்ஸ், கடலூர் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.–

3) மன்றம் அனுமதிக்கலாம்

4) அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**7.**

கடலுார் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள பொதுக் கழிப்பிடங்கள், மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் கணக்கிட்டு வார்டு வாரியாக எண் போடவும், மேற்பார்வையாளர் பெயர், பதவி, கைபேசி எண் இவைகளை அச்சடித்து தர 05.01.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட 2 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்ததாரர், கடலுார். | | திரு. ஆர்.நவனீதம், ஒப்பந்ததாரர், கடலுார். | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Rate |
| 1 | பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் கணக்கிட்டு வார்டு வாரியாக எண்கள் போடப்பட்டு மேற்பார்வையாளர் பெயர், பதவி தொலைபேசி எண்கள் இவைகளை “இஞ்சக் பிரிண்டிங் ஸ்டிக்கரில் போம் ஷீட்டில் ஒட்டும் பணி செய்தல்” (3 X 2 அளவில்) | 52 | ரூ. 1100/– | ரூ.57200/– | ரூ.1150/– | ரூ.59800/– |

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.மாரிமுத்து, கடலுார், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**8.**

கடலூர் பெருநகராட்சிக்கு 2018–19ம் ஆண்டிற்கான எழுதுபொருள் மற்றும் படிவங்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களிடம் வாங்குவதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.7,00,000/–(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)–க்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**9.**

கடலுார் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றப் பயன்படுத்தப்படும் கீழ்கண்ட வானங்களில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்யவும், புதிய டயர்கள், டியூப்கள், மற்றும் பிளாப்கள் பொறுத்தி 2018–19ம் ஆண்டிற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளது. எனவே அதற்காகும் தோராயச் செலவினம் ரூ. 4,75,000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வாகனப் பதிவு எண் | வாகன விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | T.N.31AA7323 | டிராக்டர் | 37000/– |
| 2 | T.N.31E0753 | டிரெய்லர் | 50000/– |
| 3 | T.N.31B 0986 | மினி டிப்பர் லாரி | 90000/– |
| 4 | T.N.31BB 6780 | பெரிய லாரி | 102200/– |

| | | | |
|---|---|---|---|
| 5 | T.N.31BD 9036 | காம்பேக்டர் வாகனம் | 54700/– |
| 6 | T.N.31BD 9025 | காம்பேக்டர் வாகனம் | 54700/– |
| 7 | T.N.31BD 9829 | சிறிய ரக வாகனம் | 23088/– |
| 8 | T.N.31E7915 | ஈப்பு வாகனம் | 59800/– |
| | | மொத்தம் | **471488/–** |

| | |
|---|---|
| அ.கு.– | மன்றம் அனுமதிக்கலாம். |
| 10. | இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சுற்றித் திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய 2017–18ம் ஆண்டிற்கு 200 நாய்களுக்கு கருத்தடை ஆபரேஷன் செய்ய தோராய செலவினம் ரூ.100000/–க்கும் இதற்கான செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொண்டு பின்னர் 50 சதவீதத் தொகையை தேசிய பிராணிகள் நல வாரியத்திற்கு பிரேரணை அனுப்பி பெறவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு.– | அனுமதிக்கலாம். |
| 11) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 45 வார்டுகளின் எல்லைகளை தமிழ்நாடு மறுவரைறை ஆணையத்தில் வரப்பெற்றுள்ள சுற்றறிக்கை எண்.D.–11/2017 மற்றும் ந.க.எண்.3174/2017/தே.பொ.1, நாள்.13.12.2017ல் தெரிவித்துள்ள வழிமுறைகளின்படி எல்லைகள் மறுவரையறை செய்து வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட 45 வார்டுகளின் எல்லை மறுவரையறைக்கு 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியுள்ள 173636 எண்ணிக்கையில் 31.03.2017 வரையுள்ள வரிவிதிப்பு செய்யப்பட்ட குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 25914 மற்றும் வரிவிதிப்பு அல்லாத குடியிருப்புகளில் 16918 எண்ணிக்கை ஆக மொத்தம் 42832 கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வார்டு எல்லைகள் மறுவரையறை செய்யப்பட உள்ளது. அதற்காக வரைவு வார்டு மறுவரையறை பிரேரணையை தயார் செய்வதற்கு தனியார் கணிணி மூலம் படிவம் 2(ஈ)(தெருக்கள் பட்டியல்) தயார் செய்து நகல் எடுக்கவும், ஒருங்கிணைந்த நகர் வரைபடம் மற்றும் 45 வார்டுகளுக்கான தனித்தனியான வரைபடங்கள் கலரில் தயார் செய்தும், புத்தக வடிவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பிக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1,50,000/.(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு.– | மன்றம் அனுமதிக்கலாம். |
| 12. | கடலூர் பெருநகராட்சி 2016–17ம் ஆண்டுக்குரிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, குத்தகை மற்றும் பாதாள சாக்கடை திட்டத்திற்கான நிலுவை மற்றும் நடப்பு பதிவேடுகள் தணிக்கைக்கு ஒப்படைக்க பைண்டிங் செய்யவும் மற்றும் மேற்கண்ட அனைத்து இனங்களின் வருவாய் உதவியாளர்களின் கைப்புத்தகம் (handbook) பைண்டிங் செய்யவும், அதற்கான செலவினம் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களிடம் 06.12.2017 அன்று முன்அனுமதி பெறப்பட்டு 08.12.2017 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு கைப்புத்தகம் மற்றும் நடப்பு நிலுவை கேட்பு பதிவேடு ஒன்றுக்கு பைண்டிங் செய்ய |
|---|---|---|
| 1 | ரோஜா பிரிண்டர்ஸ் 12 அப்பாவு முதலி தெரு ,கடலூர் | ரூ.51/- (ரூபாய் ஐம்பத்தி ஒன்று மட்டும்) |
| 2 | மஞ்சு அண் கோ 6 பாபு கலையரங்கம்.கடலூர் | ரூ.48/- (ரூபாய் நாற்பத்தி எட்டு மட்டும்) |
| 3 | முருகன் அச்சகம்,கடலூர் | ரூ.52/- (ரூபாய் ஐம்பத்தி இரண்டு மட்டும்) |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் வரிசை எண் 2ல் கண்ட நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டதால், இந்நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.- அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

13) கடலூர் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணி புரியும் 300 துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் ஆகீயோருக்கு தினசரி வருகை குறிக்கும் பயோ மெட்ரிக் கருவி மற்றும் பொது சுகாதாரப் பிரிவில் பணியில் ஈடுபடும் வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி பொறுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க 9.11.2017 அன்று தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ. 8014/- செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

14) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் ஒழிப்புப் பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி 145 டிபிசி பணியாளர்களைக் கொண்டு அக்டோபர் 2017 முதல் ஜனவரி 2018 வரை வீடு வீடாக களப்பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது டெங்கு காய்ச்சல் வீரியம் குறைந்து இருப்பினும், டெங்கு காய்ச்சல் பரவும் அபாயத்தினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தப்பட்ட 30 டிபிசி பணியாளர்களை இரு மாதங்களுக்கு (பிப்ரவரி 2018 மற்றும் மார்ச் 2018) வீடு வீடாக களப்பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் ந.க.6404/2016/அ1 எண்ணிட்ட 19.103.2016 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி தினக்கூலி ஒரு நாளைக்கு ரூ. 200/- வீதம் களப்பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேசச் செலவினம் ரூ. 300000/- ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

15) வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்தவேண்டும் என்று போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் ந.க.சி2/345940/2015 நாள். 22.04.2016 எண்ணிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதால் கடலூர் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்படும் வாகனம் மீடியம் டிப்பர் லாரி பதிவு எண். T.N.31F 9842 மற்றும் T.N.31BA 2565 (TATA – ACE) வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொறுத்த செலவினத்தொகை ரூ. 14550/- ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு.- | மன்றம் அனுமதிக்கலாம். |
| 16) | கடலூர் பெருநகராட்சி பகுதியில் தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் வார்டு எண்கள்.4,5,6,7,8,9,13,14,15,16,17,19,20,21,22,23, 24,25,27,28,29,30,30,31,32,33,34,35, 36,37,38,39,42,44,45 வார்டு பகுதிகளை திறந்தவெளியில் மலம் கழித்தல்/சிறுநீர் கழித்தல் அற்ற வார்டுகளாக பிரகடனப்பட்டதில் ஆட்சேபணை அல்லது கருத்து தெரிவிக்க பொது மக்கள் விரும்பினால் கடலூர் பெருநகராட்சி அலுவலகத்தில் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்கலாம் என்ற செய்தியினை தினத்தந்தி நாளிதழில் 21.09.2017 அன்று விளம்பரம் செய்தமைக்கு ரூ.6678/- விளம்பரக் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு.- | மன்றம் அனுமதிக்கலாம். |
| 17) | கடலூர் பெருநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மேற்கொள்வது சம்பந்தமாக 45 வார்டுகளில் உள்ள வீடுகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காதத் குப்பைகள் என தரம் பிரித்து வழங்கும் விபரம் அடங்கிய மல்டி கலர் நோட்டிஸ் மற்றும் A4 அளவில் 30000 எண்ணிக்கை கொண்ட ஸ்டிக்கர் வீடுகளில் ஒட்டுவதற்கு அச்சடித்து, பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கும் உத்தேசச் செலவினம் ரூ. 325000/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.- | மன்றம் அனுமதிக்கலாம். |
| 18) | கடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவை தொகுதி எண்.3, பகுதி எண்.50, நகரளவு எண்.1927/3, 1928/2எ மற்றும் 1928/3-ல் கரையேறிவிட்டகுப்பத்தில் 2 ஏக்கர் 65 செண்ட் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி 19.12.2016ல் திரு சி. சக்திவேல் மற்றும் இருவர் 4 கிழக்கு மெயின் ரோடு, சத்யா நகர், சாரம், பாண்டிச்சேரி அவர்களின் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3222/16, நாள்.16.08.2016-படி அனுமதி கோரியதைத் தொடர்ந்து, மனைப்பிரிவு அமைக்க பிரேரணை 12.01.2017ல் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கடலூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை பரிலனை செய்து 18.08.2017-ல் வரப்பெற்ற கடிதத்துடன் உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா(Park and Road Pattern)வரைபடம் இணைத்து வரப்பட்டுள்ளது. வரைபடத்தில் கண்டுள்ளபடி சாலைகள்(தார் சாலை), குடிநீர் வசதி, தெருவிளக்கு, வடிகால் வசதிகளுடன் தானபத்திரம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது<br>மேற்படியிடத்தில் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. சாலை சந்திப்புகளில் பைப் கல்லால் சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்கு மனைப்பிரிவில் 15 இடங்களில் 30W Led விளக்குகள் அமைப்பதற்காக ரூ.3,25,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ள மேற்படி தொகையை முழுமையாக செலுத்திவிட்டபடியால் மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி அனுப்பப்படுகிறது. |
| அ.கு.- | 1. அனுமதிக்கப்பட்டது.<br>2. மனைப்பிரிவுக்கு தேவையான தார்சாலைகள், பூங்கா மற்றும் தெருவிளக்குகள் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,25,000/- ஐ முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சாலை மற்றும் பூங்காவிற்கான இடங்களை நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்த பிறகு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கலாம். |

| | |
|---|---|
| 19) | கடலூர் பெருநகராட்சியின் கட்டண வசூல் உரிம இனங்களில் குத்தகை உரிம காலம் 31.03.2018 உடன் முடிவடைவதால், அரசாணை எண் (நிலை) 181 ந.நி.ம,கு,வ,துறை நாள் 19.09.2008–ன்படி 2018–19 முதல் 2020–21 வரை அடுத்த மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இனங்களை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி மன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை, பொது நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மாதாந்திர குத்தகை இனங்களின் நிபந்தனைகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>மேற்படி இனங்களை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி ஏல அறிக்கை மற்றும் நாளிதழில் விளம்பரம் செய்திடவும், பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை அச்சடிக்கவும் மற்றும் இதர செலவினங்களுக்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>குத்தகை இனம் 10, தேவனாம்பட்டினம் வெள்ளிக் கடற்கரையில் நடத்தப்படும் தற்காலிக கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்ய குத்தகை விடப்பட்டுள்ளதை எதிர்த்து தேவனாம்பட்டினத்தை சேர்ந்த திரு.பரிதிவாணன் (எ) ரவிச்சந்திரன், த/பெ,குப்புசாமி என்பவர் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண் 23988/15ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் மீது அரசு செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மீது 1287/16ல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும் street vendor Act சாலையோர வியாபார சட்டத்தின்படி நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால், இக்குத்தகை இனத்தை 2018–19 முதல் 2020–21 முடிய 3 ஆண்டுக் குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் அரசு பொருட்காட்சி மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது இந்நிகழ்ச்சியை காண வரும் பொதுமக்களின் வாகனங்களை பாதுகாக்க கட்டணம் வசூல் செய்ய 2018–19 முதல் 2020–21 முடிய உள்ள 3 ஆண்டு குத்தகை (வ.எண் 20) விட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு.– | அனுமதிக்கலாம். |

**38ம் பக்க தொடர்ச்சி**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.01.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் நகராட்சி.